முதலாவது அனைத்துலகத் தமிழியல்

# ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"



### ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## “வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்”

*ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு*


**பதிப்பாசிரியர்கள்**

பேராசிரியர். ம. இரகுநாதன்

திரு. ஈ. குமரன்

திரு. க. அருந்தாகரன்



10, 11 ஜனவரி 2020

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

| | | |
|---|---|---|
| **நூற்பெயர்** | : | **"தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு"** |
| **மொழி** | : | தமிழ் |
| **பதிப்பாசிரியர்கள்** | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| **முதற்பதிப்பு** | : | 10 ஜனவரி 2020 |
| **வெளியிடுவோர்** | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| **பக்க அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | 829 |
| **அச்சிட்டோர்** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# “மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம்...” என்ற மணிவாசகரின்

## திருவாசக அடியினை முன்னிறுத்திய உரையாடல்

**எஸ். முகுந்தன்**
இந்து நாகரிகத்துறை,
இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

திருவாசகமானது சிவபுராணம் முதற்கொண்டு அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பாடற்பகுதிகளில் இருநூற்று ஐம்பத்தாறு பாடல்களைக் கொண்டது. மணிவாசகர் பெற்ற சிவானுபூதியின் வெளிப்பாடாக அமைந்த ஞானப்பனுவலாக இது கருதப்படுகிறது.

சமயமெய்யியல் அனுபவத்துக்கு அப்பால் மணிவாசகர் என்ற தனியனின் வாழ்க்கைச் சுவடுகளை ஆய்வுசெய்ய முனைவோருக்குரிய அகச்சான்றுகளும் திருவாசகத்தில் விரவியுள்ளன. எவ்வாறாயினும் இவ்வகச்சான்றுகள் மூலமும் மணிவாசகரின் வாழ்க்கைச்சுவடுகளில் இழையோடியுள்ள சர்ச்சைகளைத் தீர்க்கமுடியவில்லை. ஏனெனில் தேவார முதலிகளைப் போலன்றி மணிவாசகரின் வாழ்வும் காலமும் ஆய்வாளர்களுக்கு அவிழ்க்க முடியாத புதிர்களைத் தொடர்ந்தும் வழங்கியவண்ணம் உள்ளது. மறைமலையடிகள், பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, க. வெள்ளைவாரணனார், பேராசிரியர் டி. டி. சித்திலிங்கையா, பேராசிரியர் அ. சிவலிங்கனார், பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயர், முனைவர் சோ. ந. கந்தசாமி, மு. பு. சேகைஷயர், திருமலைக் கொழுந்துப்பிள்ளை ஆகியோர் மணிவாசகரின் வாழ்க்கைச்சுவடுகள் தொடர்பிலான காத்திரமான ஆய்வுகளில் ஈடுபட்டோராக அறியப்படுகின்றனர். இவர்களுடைய ஆய்வுகளின் செல்நெறியானது பெரும்பாலும் இரண்டு தளங்களில் பயணித்துள்ளது.

மணிவாசகரின் காலம் : தேவார முதலிகட்கு முற்பட்டது
தேவார முதலிகட்கு பிற்பட்டது.

எனினும் குறித்த இந்த ஆய்வுக்கட்டுரையானது மணிவாசகரின் காலம் குறித்த சர்ச்சைகளில் கவனம் செலுத்தவில்லை.

“மிண்டிய மாயாவாதம் எனும்
சண்டமாருதம் சுழித்து அடித்தார்ப்ப......”

என்று தொடரும் திருவாசகத்தின் போற்றித்திருஅகவல் அடிகள் குறித்தே அது கவனம் கொள்கிறது.இங்கே "மாயாவாதம்" என்ற சொல்லாடலால் மணிவாசகர் சுட்டவிழைவது ஆதிசங்கரரின் அத்வைதத்தையே என்பது பலருடைய ஏகோபித்த முடிவாகும். முற்கூறிய ஆய்வாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.எவ்வாறாயினும் "அத்வைதம்" சைவபக்தி இயக்கம், பௌத்தம் ஆகிய மூன்று தளங்களில் தென்னிந்திய வரலாற்றுச் செல்நெறியைச் சீர்தூக்கி நோக்கும்போது "மாயாவாதம்" என்ற சொல்லால் அத்வைதமே சுட்டப்பட்டது என முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள இயலாது. பௌத்த மெய்யியற் பிரிவுகளின் விகசித்த மேலாண்மையை விமர்சிக்கும் விதமாக மணிவாசகர் இச்சொற்றொடரைக் கையாண்டிருக்க இடமுண்டு. இதற்கான சாத்தியப்பாடுகளை அடையாளப்படுத்தும் வகையிலேயே இக்கட்டுரை பயணிக்கிறது.

**திறவுச் சொற்கள் :-** மாயாவாதம்,மணிவாசகர்,சூனியவாதம், பௌத்தம்
உலகாயதம்.

**அறிமுகம்**

சைவசமய இலக்கியங்களுள் திருவாசகம் தனித்துவமானது. அதனைப் பாடியவரான மணிவாசகரும் ஏனைய திருமுறை ஆசிரியர்களை விடவும் தனித்துவமானவர். அவருடைய வரலாறும் காலமும் இற்றைவரை ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டும் தீர்வு கிட்டப்பெறாதவை புதிர்த்தன்மை நிறைந்தவை. அவர் தேவாரமுதலிகட்கு முற்பட்டவரென்றும், பிற்பட்டவரென்றும் இரண்டுவிதமான கருத்தாடல்களில் நடைபெறும் ஆய்வுப்போர்கள் முடிந்ததாயில்லை. மணிவாசகர் தனது திருவாசகத்தின் எந்த ஒரு இடத்திலும் தேவாரமுதலிகளைப் பற்றி நினைவுகூரவில்லை. மறுதலையாகத் தனது திருப்பள்ளியெழுச்சியின் ஐந்தாம் பாடலில்,

"கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை" எனக் குறிப்பிட்டு அதிரவைக்கிறார்.

தேவாரமுதலிகள் இறைவனோடு உரையாடிய செய்திகளை இவர் கேட்டறியாதவர் போலப் பேசும் இந்தத்தொனி ஏற்படுத்தும் குழப்பம் ஒருபுறமிருக்க திருநாவுக்கரசர் தனது திருவாரூர் திருப்பதிகத்திலும், திருப்பூவணத் திருத்தாண்டகத்திலும் மணிவாசகரின் வரலாற்றோடு தொடர்புடைய இரண்டு முக்கிய செய்திகளைப் பதிவுசெய்துள்ளமை மணிவாசகரின் வரலாறு குறித்த சர்ச்சைகளுக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது.

அவையாவன இவர் பொருட்டு இறைவன்
நரியைப் பரியாக்கிய செய்தி
இதனை "நரியைக்குதிரைசெய்வானும்" என்று திருநாவுக்கரசர் சுட்டியுள்ளார்.
(திருநாவுக்கரசர் தேவாரம்:4.6.2.)